Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-3 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 14-9-1946 ஆவணி௴ 29௳ { மணி 49

## நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

(தோழர் M. சிங்காரவேலு B.A., B.L.)

(சென்றவாரத் தொடர்ச்சி)

முன் ஏடுகளில் சுயராஜ்யத்தின் இலட்சணங்களையும், அதன் குறைபாடுகளையும், எடுத்துக் காட்டினோம். இந்த குறைகளை உடைய ராஜ்யம் நமக்கு வேண்டுமா எனவும் கடாவினோம். இனி சமதர்ம ராஜ்யத்தின் இலட்சணங்களையும், அதன் மேம்பாட்டையும் விளக்குவோம்.

சமதர்மம் அல்லது சமதர்ம ராஜ்ய மென்றால் என்ன? "சமதர்மம்" என்ற சொல்லிற்குரிய பொருள் என்னவெனில், சமத்துவப் பொறுப்பு (Equal Responsibility) என்பதாம். தனவந்தரும், எளியோரும்; முதலாளியும், தொழிலாளியும்; உடையோனும், இல்லாதவனும்; நிலம் படைத்தோனும், நிலம் இல்லாதவனும்; வீடு படைத்தவனும், வீடு இல்லாதவனும்; வாங்குவோனும் விற்போனும் ஆகிய எல்லோரும், சரி சமத்துவப் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருத்தல் சமதர்மமெனப்படும். எப்பொழுது சமப் பொறுப்பு இருக்கின்றதோ, அப்பொழுதே அதனோடு சம உரிமையும் உண்டு. அதனை ஆங்கிலத்தில் Equal Right என்று வழங்குவார்கள். ஆதலின் சமதர்மத்தில், சரிசம பொறுப்பும், சரிசம உரிமையும் (Equal Rights and Equal Responsibilities) பொருந்தி உள்ளன. எந்த சமூகத்தில் எல்லா மக்களுக்கும் சம உரிமையும், சம பொறுப்பும் உள்ளனவோ, அந்த சமூகம், சமதர்ம சமூகமெனப்படும். அதனை ஆங்கிலத்தில் Socialist Community என்று கூறுவர். அவ்வித சமதர்ம சமூக ஆட்சியைச் சமதர்ம ராஜ்யமென்று வழங்குவர். ஆங்கிலத்தில் இதனை Socialist State என வழங்கப்படும்.

சிலர், எந்த சமூகமாவது, சாதி வேற்றுமை இல்லாதிருந்தால் அதனை சமதர்மமுள்ள சமூகமென நினைக்கின்றார்கள். அது தவறு. முகமதியர்களுக்குள் சாதி வேற்றுமையில்லை. ஆனால், அச் சமூகத்தைச் சமதர்ம சமூகமென்று கூற மாட்டார்கள். இன்னும் சிலர், ஜாதிவேற்றுமையும், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேற்றுமையுமற்று, பொதுவாக உண்ணுதல் சமதர்மமென்பார்கள். அதுவும் தவறு. முகமதியர்களும் ஐரோப்பியர்களும் ஜாதி வேற்றுமையின்றி சமத்துவமாக உண்ணுகின்றார்கள். ஆனால் அவர்களைச் சமதர்ம சமூகத்தினரென்று அழைக்க முடியாது. கலப்பு மணம் எந்த சமூகத்தில் நடக்கின்றதோ, அந்த சமூகம், சமதர்ம சமூகமென்பார்கள் சிலர், அதுவும் தவறு. கலப்பு மணம் புரியும் சமூகங்கள் பலவுள. அப்படி இருந்தும் அச் சமூகங்களைச் சமதர்ம சமூகமென்று அழைப்பதில்லை. மதமற்ற சமூகம் சமதர்மமாகுமா? என்று பார்போமானால், அதுவும் ஆகாது. நாஸ்திக சமூகத்தாரை சமதர்மிகளென்று வழங்குவதில்லை. ஆனால் ஜாதியின்மையும், மதமின்மையும் சமதர்ம அனுஷ்டானத்தில் சேர்ந்தவைகளாக இருந்தபோதிலும், இவைகளை மாத்திரம் அனுஷ்டிக்கக்கூடிய சமூகங்கள் சமதர்ம சமூகமாகா. சரி சமத்துவம், சம உரிமை ஆகிய இவை இரண்டும் பொருள் பண்டத்தவில், அதாவது பொருளாதாரத்தில் இல்லாவிடில், மற்ற எந்த உரிமையும், எந்த சமத்துவமும் இருந்தும் பயனில்லை. எந்த பொறுப்பு இருப்பினும் பயனில்லை. பொருளாதாரத்தில், சம உரிமை (Equal Rights,) சமபொறுப்பு (Equal Responsibility) எந்த

சமூகத்திலில்லையோ, அந்த சமூகம் சமதர்ம சமூகமாகாது.

பாரத ராமாயண காலமுதல் எவ்வளவோ, கடவுளற்ற சமூகங்களிருந்தன; ஜாதியற்ற சமூகங்களிருந்தன. இன்றைக்கும் இருந்து வருகின்றன. ஆனால் அவைகள் யாவும் சமதர்ம சமூகங்களெனச் சொல்ல முடியாது. அப்படியானால் சமதர்மமென்றால் என்ன? நாட்டில் விளையும் விளை பொருளையும், செய்யப்படும் செய் பொருளையும் அந்நாட்டிலுள்ள யாவருக்கும், சரிசமத்துவமாக விநியோகஞ்செய்யும் சமூகமெதுவோ அதுதான் சமதர்ம சமூகமெனப்படுமென மதிக்கப்படும். மற்ற சமூகங்கள் யாவும், முதலாளி சமூகமென்றாகிலும், அல்லது சிறு பொருளாளி சமூகமென்றாகிலும், வழங்கப்படும். இத்யாதி சமூகங்கள், ஜாதியில்லாதவர்களால் நிறைந்திருக்கலாம், அல்லது மதமற்றவர்களால் நிறைந்திருக்கலாம், அல்லது கலப்பு மணம் செய்கின்றவர்களால் நிறைந்திருக்கலாம். இருந்தாலும், இத்யாதி சமூகங்கள், சமதர்ம சமூகங்களாகா.

சமதர்ம சமூகத்தில், மற்ற சமூகங்களில் இருந்து வரும் முக்கிய இலட்சணங்கள் இல்லாமலிருந்து வரும். அவையாவன:—முதலாவது சகலவித பொருள்களிலும் இலாபம் சம்பாதிக்கும் மனப்போக்கு சமதர்மத்தில் இல்லாமலிருக்கும். இந்த மனப்போக்கால், உழைத்தவனுக்கு ஒன்றுமில்லாமல், உழைக்காத சோம்பேறிகளுக்கு எல்லா இலாபமும் கிடைக்கும். இப்படிப்பட்ட திட்டம் சமதர்மத்திலில்லை. இரண்டாவது, சிலரே சகல பொருள்களையும் கைப்பற்றி, சொந்தமாக்கிக் கொள்ளும் இலட்சணமும், சமதர்மத்தில் இல்லாமலிருக்கும். மூன்றாவது, விளையும் பொருள்களும், செய்யும் பொருள்களும், விளைவிக்கச் செய்யும் சமூகத்தாருக்கு, ஏற்றத்தாழ்வின்றி விநியோகம் செய்யப்படும் இலட்சணம், சமதர்மத்தில் விசேஷமாகப் பொருந்தி உள்ளது. நான்காவது, சமதர்ம சமூகத்தில் நிலத்தீர்வை வாங்கும் நிலச்சுவான் இரான். குடக்கூலி வாங்கும் சொந்தக்காரனுமிரான். இலாபம் சம்பாதிக்கும் வர்த்தகனுமிரான். வட்டிவாங்கும், வணிகனுமிரான். அவசியமாக வாங்கவேண்டிய நிலத்தீர்வையும், குடக்கூலியும், வீட்டு வாடகையும், வர்த்தக இலாபமும், கடனுக்கு வட்டியும், சகலவித இலாபங்களும் (Profits), பொது மக்களுக்கே உரித்தாகி, அவர்களின் வாழ்விற்கு வேண்டிய அத்தியாவசியமானவைகளாகிய உண்ணும் உணவு, தங்கும் வீடு, வாசல், அணியும் ஆடை, கற்கும் கல்வி முதலியவற்றிற்கு உபயோகப் படுத்தப் படும். ஐந்தாவது, தற்கால சோம்பேறிகளாகிய நிலச்சுவானும், வர்த்தகனும், வணிகனும், வாடகை வாங்குவோனும், சமதர்ம சமூகத்தில் உழைக்கும் மக்களோடு, சரிசமத்துவமாக உழைத்து எல்லாவித சமதர்ம சுகபோகங்களையும் சரிசமத்துவமாக அநுபவிக்கும் பாக்கியத்தைப் பெறுவார்கள். ஆறாவது, சமதர்ம சமூகத்தில் சொத்துவைத்திருக்கும் ஜாதி என்றும் (Haves), சொத்து இல்லாத ஜாதியென்றும் (Have Nots) சொல்லப்படும் பாமரன இனவேற்றுமை இருக்காது. எஜமான் ஜாதியென்றும், வேலைசெய்யும் ஜாதியென்றும் சமதர்மத்தில் கிடையா. தற்கால உலகத்திலே இருக்கும் இரண்டு ஜாதியர்களாகிய, பொருளாளி தொழிலாளி என்போர் இருக்கமாட்டார்கள், சமதர்மத்தில் ஒரே இனம்தான் இருக்கும். அதாவது உழைக்கும் இனம் ஒன்றுதான். ஏழாவது, சமதர்மத்தில் ஒவ்வொருவனுக்கும் உழைக்க உரிமையுண்டு, பொறுப்புண்டு. எட்டாவது, "உழைக்காதவனுக்கு உணவில்லை" என்பதே சமதர்ம கொள்கையாகும். ஒன்பதாவது இக்காலத்தில் உழைப்பின்றிச் சோம்பேறிகளாக வாழ்ந்து வரும் சில மக்களுக்குச் சமதர்மத்தில் வாழ இடமே இல்லை. பத்தாவது, சமதர்மத்தில் சோம்பேறிகள் வாழவும் முடியாது. சமதர்மத்தில் இன்னும் சில இலட்சணங்களுண்டு. உழைப்பவன் ஒருவன், அநுபவிப்பவன் வேறொருவன் என்ற ஆபாச வித்தியாசமான நிலைமையே கிடையாது. "உழைப்பவனுக்கு உரியது, உழைப்பின் பயன்" என்பதுதான் சமதர்மத்தின் தர்மம். சமதர்மத்தில் எல்லோரும் உழைக்கவேண்டும். உண்டாக்கப்படும் பொருள்களும், விளைவிக்கப்படும் பொருள்களும், தினசரி வாழ்விற்கு வேண்டியவையாதலால், சமதர்ம சமூகத்தில், வேலை எல்லோருக்கும் இருந்தே வரும். சமதர்மத்தில் வேலை இல்லை என்று சொல்லும் நிலைமை வராது. எந்த வேலையாகிலும் இருந்துகொண்டே இருக்கும், சமதர்ம சமூகத்தில் வேலை செய்வோர் போதாமலிருக்குமே யல்லாது, யாருக்கும் வேலையில்லாமல் இராது.

சமதர்மத்தில், எந்த காலத்திலும், திருப்தி என்பதே இருக்காது. திருப்தி அடைந்த மனித சமூகம், இறந்த சமூகத்திற்கே (extinct society) சமானமாகும். எனவே அதிருப்தியே மனித சமூகத்தின் இயற்கைக் குணமாகும். அதிருப்தியால்தான், மனித சமூகம், மற்ற மிருகாதிகளை வென்று,

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# "பாரததேவி"க்கு நோட்டீஸ்

19-8-46ல் பாரததேவியில் துறையூரில் கருஞ்சட்டைப் படையினர் கலாட்டா என்ற தலைப்பிட்டு வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் தவறுடைத்து என்பதற்காகப் பாரததேவி ஆசிரியருக்குக் கீழ்க்காணும் நோட்டீஸ் துறையூர் திராவிட கழகத் தலைவரின் சார்பில் அதிகாரம்பெற்ற வழக்கறிஞர் தோழர் இரங்கசாமி செட்டியார் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ளது.

1. குறிப்பிட்ட ஒரு குழுவினராலோ, ஒரு சாதியினராலோ அல்லது பொதுமக்களாலோ இரண்டாமுறையாக 10-8-46 லிருந்து துறையூரில் வருணஜெபம் நடத்தப்படவில்லை.

2. 15-8-46லோ அல்லது வேறு எந்த நாளிலோ கருஞ்சட்டைப்படையின் எந்த உறுப்பினராலும் துறையூரில் யாக குண்டம் அழிக்கப்படவோ அல்லது கலைக்கப்படவோ இல்லை.

3. 15-8-46ல் பார்ப்பனர்கள் கருஞ்சட்டைப் படையினரால் கடுமையாகப் பேசப்பட்டு கொடூரமாகத் தாக்கப்படவில்லை.

4. சிவன் கோயிலிலுள்ள விக்காகங்கள் கருஞ்சட்டைப் படையினரால் உடைக்கப்படவுமில்லை.

5. கருஞ்சட்டையினருள் 50-பேர்கள் சத்திரத்திற்குச் சென்று காலக்ஷேபம் செய்துகொண்டிருந்த மக்களின்மேல் கற்களை வீசினதாகச் சொல்லப்பட்டுள்ள செய்தி முற்றிலும் தவறாகும்.

6. ஆண்டு நடைபெற்ற குழப்பத்தால் எந்த குழந்தையும் மிதிக்கப்பட்டு துன்பத்திற்கு ஆளாகவில்லை.

7. மேற்குறிப்பிட்ட கருஞ்சட்டையினரால் எந்த வகைச் சொத்தும் அழிக்கப்படவும் இல்லை; 'பெரியார் வாழ்க', 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற சுலோகங்களைச் சொல்லவுமில்லை.

8. சத்திரத்திற்கு அருகில் போலீசார் வந்து கருஞ்சட்டையினரை வெளியேற்றவில்லை.

9. உள்ளூர் காங்கரஸ் கமிட்டியினரால் அன்று துறையூரில் கூட்டம் ஏற்பாடு செய்யப்படவுமில்லை, கற்கள் கூட்டத்திலுள்ள மக்களின் மேல் வீசப்படவுமில்லை.

10. கூட்டத்திலிருந்த உள்ளூர் காங்கரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ சுவாமிநாத உடையார் தாக்கப்படவுமில்லை.

11. கூட்டத்தில் எறியப்பட்ட கல்லால் பெட்ரோமாக்ஸ் விளக்கு உடைபடவுமில்லை; கூட்டத்தில் சொற்பொழிவாற்றிக்கொண்டிருந்த தோழர் இராசகோபாலன் அவர்களின் மண்டையில் விளக்குடைந்ததால் சிதறுண்ட கண்ணாடித் துண்டுகள் பட்டு இரத்தம் வரவுமில்லை.

12. ஆண்டிருந்த ஒலிபரப்பி கருஞ்சட்டையினரால் சேதப்படுத்தப்படவுமில்லை.

13. மீண்டும் போலீசார் கூட்டம் நடைபெற்றவிடத்திற்கு வரவுமில்லை; அப்படி வந்ததின் காரணமாகத் தலைவர்களும் கூட்டத்தினரும் போலீசார் பாதுகாப்பில் வீடு செல்லவுமில்லை.

14 செய்தித்தாளில் வெளியிட்டபடி 4 கருஞ்சட்டைப்படை உறுப்பினர்கள் போலீசாரால் கைது செய்யப்படவுமில்லை.

15. மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைக் கருஞ்சட்டைப் படையினர் செய்தனர் என்ற செய்தி மரியாதையற்றதாகவும், மானநஷ்டம் தொடுப்பதற்குரியதாகவும் இருப்பதுமன்றி குறிப்பிட்ட எல்லாச் செய்திகளும் பொய்யானவைகளாயுமுள்ளன.

16. திராவிடர் கழகத்தினரின் சட்டபூர்வமாயமைக்கப்பட்ட கருஞ்சட்டைப் படையினரைப்பற்றி தவறான கருத்துக்களை மக்களுக்குப் பரப்பவேண்டுமென்ற நோக்கத்துடனேயே மேற்குறிப்பிட்ட செய்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

17. மேற்சொல்லப்பட்ட செய்தி கருஞ்சட்டைப் படையினரின் புகழைக் கெடுப்பதற்கென்றே, தங்களைப்போன்ற பொறுப்புள்ளவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய கவலையைச் சிறிதும் பொருட்படுத்தாது, தாங்கள் பிரசுரித்துள்ளீர்கள்.

18. 23-8-46ல் தாங்கள் கொடுத்த பதில் திருப்திகரமானதாயில்லையென்பதோடு மேற்குறிப்பிட்ட செய்தியைத் தங்களுக்குக்கொடுத்த நபரை வெளிப்படுத்த விரும்பாத காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியனவாயில்லை. தாங்கள் கையாண்டுள்ள தொழில் முறையானது வகுப்புக் கிளர்ச்சியை வளர்த்து விடுபவர்களைப் பாதுகாக்கவோ அல்லது தங்கள் செய்கையை மறைக்கவோ வேண்டுமென்றே கற்பனை செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து தாங்களும் உடந்தையாக இருந்தவர் என்று கருதுவதற்கு ஏதுவாகிறது. இதுபோன்ற சமுதாய விரோதிகளை இதனை வெறுக்கும் பொது மக்களுக்குத் தெரியப்படி செய்வது தொழில் முறையிலும் சாலச்சிறந்ததாகும்.

19. துறையூர் திராவிட கழகத்தினர் 13-8-46ல் திராவிட கழகத்தின் சார்பில் தங்கள் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்வதெனத் தீர்மானம் செய்துள்ளனர்.

20. தாங்கள் மேற்குறிப்பிட்ட தவறான செய்திகளைத் தெரிவித்தவருடைய பெயரையும், முழு முகவரியையும் தெரிவிக்காமலும், துறையூர் திராவிட கழகத் தலைவரிடத்தில் எழுத்துவாயிலாக மன்னிப்புப் பெறாமலும் இருந்தால், தாங்கள் தவறான செய்தியைத் தங்கள் செய்தித்தாளில் வெளிப்படுத்தியதற்காக இந்த நோட்டீஸ் கண்ட 7-நாட்களுக்குள் தங்கள் பேரில் கிரிமினல் கோர்ட்டில் மானநஷ்ட வழக்குத் தொடரப்படும் என்பதோடு, தவறான குற்றச்சாட்டுக்காக சிவில் கோர்ட்டிலும் நஷ்டத்திற்காக வழக்குத் தொடரப்படும்.

[ஓர் பொறுப்பு வாய்ந்த தேசியவாதி இப்படிப்பட்ட தவறான செய்திகளை வெளிப்படுத்தி பிறர் அதன்மேல் நோட்டீஸ் கொடுக்கவேண்டிய நிலைமையை ஏற்படுத்திக்கொண்டது உள்ளபடியே கண்டிக்கத்தக்கது. வெளிப்படையாக மன்னிப்பு வாங்கிக்கொள்வதே பாரததேவியின் பொறுப்புவாய்ந்த ஆசிரியரின் கடமையாகும். —ஆ-ர்]

## பிறப்பு

திண்டுக்கல் திராவிடக்கழகச் செயலாளர் தோழர் வீராசன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் காமாட்சியம்மையாருக்கு 19-7-46 ஓர் பெண் மகவு பிறந்துள்ளது. குழந்தைக்குப் பகுத்தறிவுமணியெனப் பெயரிடப் பட்டது.

குடி அரசு

1946-ஆம் செப்டம்பர் 14உ

## மக்கட் பிரதிநிதிகளின் ஆட்சியா? ஜார் மன்னனின் ஆட்சியா?

"மங்கலகரமான மஞ்சள் பெட்டிக்கு அஞ்சாமல் அளியுங்கள் உங்கள் வாக்குரிமையை; மஞ்சள் பெட்டிக்குப் போடும் வோட்டு வெள்ளையனுக்குக்கொடுக்கும் சீட்டு; வறுமையால் வாடி வதங்கிடும் மக்கள் வளையுடன் வாழ வழி தேடுவோம்; நாள் முழுதும் உழைத்தும் உழைப்பிற்குரிய ஊதியம் பெறாது உழன்றிடும் தொழிலாளர்களின் துயரினைத் தொலைத்திடுவோம்; உழைக்கவோர் குழுவும், உண்ணவோர் குழுவும்; பிழைக்க வழியிலாப் பிறிதோர் குழுவும் மலிந்து காணுமிம் மண்பதைத் தொகுதியில் ஏற்றத் தாழ்வின்றி யாவரும் ஒரு தன்மையராய் இன்புற்று வாழ்தற்கு ஆவன புரிவோம். 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம்; எல்லோரும் இந்நாட்டு மக்கள்' என்ற நிலைமையை நாட்டிலே நிலை பெறச் செய்வோம்; பஞ்சத்தை பறக்கவடிப்போம்; கள்ளரக்கனைக் கடிதில் விரட்டுவோம்; வெள்ளையனை வெளியேற்றுவோம்; வேறு நாட்டினர்க்குக் கனவிலும் பணியோம்" என்ற பல்லவி பக்கமேளத்துடன் பாடப்பட்டது; காங்கிரஸ்காரர்கள் ஆட்சி மன்றத்தில் அமர்ந்து ஆளுவதற்கு முன்னர்.

தேசியத் தோழர்களின் ஆசைமொழியால் மக்கள் மதி இழந்தனர்—இல்லை; மயக்கமுற்றனர்; மஞ்சள்பெட்டிக்கு வஞ்சகமின்றி தங்கள் வாக்குரிமையை வழங்கினர்.

அதன் காரணமாகத் தேசியத் தோழர்கள் ஆட்சிமன்றத்தில் அமர்ந்தனர். ஆளவும் தொடங்கினர். உடனே நாட்டின் எப்பகுதியிலும் கொந்தளிப்பு 'உழைக்கின்றோம்; ஆனால் உழைப்பிற்குத்தக்க ஊதியம் பெறவில்லை' என்ற ஒப்பாரி ஓர்புறம். 'பாடுபடுகின்றோம்; ஆனால் பசிப்பிணி தீரவில்லை' என்ற பதறல் மற்றோர்புறம். 'உணவுப் பொருள்களை விளைவித்தோம், ஆனால் எங்கட்கு உண்ண உணவில்லை' என்ற கூக்குரல் வேறோர்புறம். ஆடையைச் செய்தோம், ஆனால் எங்கட்கணிய ஆடையில்லை என்ற அழுகுரல் பிறிதோர்புறம். எங்கு பார்த்தாலும் இல்லை இல்லை என்ற ஏக்கம்.

குறையைப் போக்கிக் கொள்ள வழியிலாது வருந்திடும் மக்கள் யாரை நொந்து கொள்வர்? கணக்கிலங்காக் கடவுளரையும், ஊழ்வினைப் பயனையும் நினைந்துருகுவரா? ஒருக்காலுமில்லை. அவையெல்லாம் அந்தக் காலத்தில்; மக்களின் முயற்சியில் நம்பிக்கைக் கொள்ளாத காலத்தில், உலுத்தரான காலத்திலும், ஊழ்வினைப் பயனாம்தான் என்று கருதி வந்த அறியாமை நிறைந்திருந்த காலத்தில். இக்காலத்தில் உண்மையை உணர்ந்துவிட்டனர்; கடவுளும், மதமும், ஊழ்வினைப் பயனும் ஏமாந்த காலத்தில் மக்களை மடையர்களாக்க ஒரு சிறு கூட்டத்தினரால் மக்களிடையே திணிக்கப்பட்டன என்பதை உணர்ந்துவிட்டனர். எனவே கால் வயிற்றுக் கூழுக்கும் வழியின்றி வாடி வதங்கிடும் மக்கள் வாளாயிரார்.

நாட்டிலே மக்களின் நல்வாழ்விற்கும், தீவாழ்விற்கும் நாடாளும் வர்க்கமே காரணம் என்பதை உணர்ந்துவிட்டனர். உண்மையை உணர்ந்த உழைப்பாளிகள் தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ள நாடாளும் மக்களை நாடிச் செல்வர்; இது இயற்கை. ஒவ்வொரு நாட்டிலும் இவ்வண்ணமே நடந்துள்ளது. அதேபோல் நம் மாகாணத்திலும் வாழ்க்கையுடன் பெரும் போர்புரிந்து சளைத்திட்ட மக்கள் நாடாளும் வர்க்கத்தினரை நாடுகின்றனர்.

"நாட்டின் மக்களுக்காகவே ஆட்சி மன்றம் புகுகின்றோம்" என்று ஆசைமொழி பேசி அனைவருடைய ஆதரவையும் பெற்று ஆட்சி மன்றத்தின்கண் அமர்ந்திருக்கும் அன்பர்களை நாடி, அல்லற்பட்டு உழன்றிடும் மக்கள் அணுகினால் ஆட்சிமன்றத்திலிருக்கும் மக்கள்சர்க்காரின் கடமை என்ன? அல்லலையகற்றிக் கொள்ள அவர்களை அணுகினவர்களுக்கு அன்புமொழி கூறி ஆதரவளித்தனரா? அவர்களின் குறைபாடுகள் யாவை என வினவினரா? குறைபாடுகளுக்குக் காரணம் என்ன என்பதை ஆய்ந்தனரா? அவர்கள் உள்ளம் உவகையடைய வழி கோலினரா? இல்லை, இல்லவே இல்லை. பின்னர் என்ன செய்கின்றனர்?

ஈவிரக்கமற்ற வசைமாரிகள் பொழிகின்றனர். — மீறினால் கண்ணீர்ப்புகை, அதையும் மீறினால் தடியடி! இதுதானா மக்கள் சர்க்காரின் ஆட்சி?

நாட்டின் உயிர்நாடிபோன்று விளங்கும் இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். எதற்காக வேலை நிறுத்தம் செய்துள்ளனர்? தங்கள் உரிமையைக் காப்பாற்றுவதற்காகவும், தங்கள் பிறப்புரிமையை அன்னியன் கொள்

ரோஜா முத்தையா

ளைகொண்டு செல்லாமலிருப்பதற்காகவும் போரிடுகின்றனர். இந்நிலைமையில் தொழிலாளர்களின் நன்மைக்காகவே ஆட்சியிலமர்ந்திருப்பதாகக் கருதப்படும் மந்திரிகள் என்ன செய்ய வேண்டும். தொழிலாளர்களின் உரிமையை வழங்குவதற்கு ஆவன செய்வதுதானே நேர்மை? அங்ஙனம் உண்மையில் செய்தனரா? இரயில்வே அதிகார வர்க்கத்தினரிடம் ஆலிங்கனம் செய்து கொண்டு அவர்களுக்கு ஆதரவு செய்வது நீதியா? கடந்த 60-ஆண்டுகளாகக் காங்கரஸ்காரர்கள் போராடியதெல்லாம் உரிமையைப்பெறுவதற்காகத்தான் என்று பேசப்படுகின்றதே! அப்படியாயின் ஏன் தொழிலாளர்களுக்குரிய உரிமையைக் கொடுக்கும்படி இரயில்வே அதிகார வர்க்கத்திற்குக் கட்டளையிடக்கூடாது?

அங்ஙனம் கட்டளையிடுவதுதானே நீதியும் நேர்மையுமாகும்? அதற்குப் பதிலாக இப்போழ்து என்ன நடந்திருக்கிறது? தொழிலாளர்கள் சுட்டு வீழ்த்தப்படுகின்றனர். தடியால் நன்கு தாக்கப்படுகின்றனர். கண்ணீர்ப்புகையால் கதிகலங்குகின்றனர். இவைகள் யாவும் அட்டூழியஞ் செய்வதற்கென்றே பழக்கப்படுத்தி வைக்கப்பட்டுள்ள ஈவிரக்கமற்ற மலபார் போலீசாரைக் கொண்டு நடத்தப்படுகின்றன. காங்கரஸ்காரர்கள் போராட்டம் நடத்திவந்த காலத்தில் காங்கரஸ்காரர்களைப் பலவகையாலும் துன்புறுத்தியவர்களே இம்மலபார்போலீசார். அந்த காலத்தில் 'நான் ஆட்சிமன்றத்திற்குச் சென்றால் உடனே இந்த மலபார் போலீஸ் அரக்கர்களை அடியோடு தொலைத்திடுவேன்' என்று கூறினார் பிரகாசம் பந்துலுகாரு. ஆனால் இப்போ[illegible] இப்போலீசார் இவ்வக்கிரமச் செயல்களைச் செய்வதற்கு இப்போழ்துள்ள பிரகாசம் மந்திரிசபையார் உடந்தையா என்று கேட்கின்றோம். அல்லாக்கால் ஏன் மந்திரிசபையார் மலபார் போலீசாரைத் திரும்பி தம் மிருப்பிடம் போகச் சொல்லக்கூடாது?

இவர்கள் செய்திடும் கொடுமைகளை நேரில் அநுபவித்தவர்களாயிற்றே இப்போது இருக்கும் மந்திரி சபையார்! எனவே இவர்கள் மலபார் போலீசாரின் ஈவிரக்கமற்றதன்மையை முற்றிலும் உணர்ந்திருந்தும் அவர்களை இரயில்வே அதிகார வர்க்கத்தினர் தங்கள் பிடிவாதத்தைப் பூர்த்திசெய்து கொள்ளுதற்குப் பயன்படுத்திக் கொள்ள விடுவது சரிதானா என்று கேட்கின்றோம்.

அஹிம்சைமூர்த்திகளின் ஆட்சியில் மேலே குறிப்பிட்ட முறையில் அட்டூழியம் நடக்கலாமா? பின்னர் அக்கொடுமைகளை நடக்க விட்டுவிட்டு எங்களுக்கு அஹிம்சையில் அளவு கடந்த அன்புண்டு, நாங்கள் அஹிம்சை மூர்த்தியாரின் சிஷ்யகோடிகள் என்று கூறுவதில் என்ன பொருள் இருக்கின்றது?

இப்படிப்பட்ட கொடியஆட்சியை ஏன் இரஷியநாட்டு ஜார் மன்னனின் ஆட்சிக்கு ஒப்பிடக்கூடாது? ஜார் மன்னனின் ஆட்சியைவிட மிக்கொடுங்கோன்மை வாய்ந்த ஆட்சியென்றுகூட சொல்லலாமே? ஜார் மன்னன் தான் தொழிலாளர்களுக்கு விரோதியென்றும், தான் அரசாளுவதற்கென்றே கடவுளால் தோற்றுவிக்கப்பட்டவனென்றும், அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்காத பாட்டாளிமக்களைக் கொடுந் தண்டனைகளுக்கு ஆட்படுத்துவதாகவும் சொல்லிவிட்டே கொடுங்கோலாட்சி செய்தான். ஆனால் இன்று நமது பிரகாசம் மந்திரிசபையார் "நாங்கள் நாட்டு மக்களின் பிரதிநிதிகளாய், சிறப்பாகத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாயிருந்து அரசாட்சி செய்கின்றோம் என்று கூறிக் கொண்டு மக்களின் குறைபாடுகளை நீக்காமலும், தொழிலாளர்களின் உரிமையை வழங்காமலும் அவர்களைப் பலவகையிலும் துன்புறுத்துதற்குடந்தையாயிருக்கின்றனரே? ஜார் மன்னன் மனதில் உள்ளதை அப்படியே மக்கட்குக் கூறிதான் கொடுங்கோன்மையாட்சி நடத்தினான். இவர்கள் தங்கள் மனக்கருத்தை வெளிக்குக் காட்டாமல் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி மக்களுக்குத் தீங்கிழைக்கின்றனரே! எனவே இவர்கள் ஜார் மன்னன் ஆட்சியைவிட கொடுங்கோல் ஆட்சி நடத்துகிறார்கள் என்று கூறுவதில் என்ன தவறு இருக்கமுடியும் என்று கேட்கின்றோம்.

ஜார் மன்னன் தன் கொடுங்கோன்மை ஆட்சியால் இறுதியில் தன்கோனாட்சி இறந்து அழிவுறும் நிலைமை ஏற்பட்டது. அப்படிப்பட்ட நிலைமை நம் நாட்டிலும் ஏற்படாமலிருக்க வேண்டுமானால் இன்றைய மந்திரிசபையார் தங்கள் மனப்போக்கையும், ஆட்சி முறைமையையும் மாற்றிக் கொள்ளவேண்டும். இன்று நாம் காங்கரசுக்கு மாறுபட்டவர்கள் என்ற காரணத்தால் இதைக்கூறவில்லை. தேசிய ஏடுகளில் சிலகூட காங்கரஸ் மந்திரிசபையாரின் போக்கு நாட்டு மக்களின் வெறுப்பை நாளுக்குநாள் பெருக்கிக் கொண்டே வருகின்றதெனச் சற்றுத் துணிவுடனேயே எடுத்துக்கூறுகின்றன.

எனவே, மந்திரிசபையார் மஞ்சள் பெட்டிக்கு உங்கள் வாக்குரிமையை விழுங்குங்கள்

## திராவிட விவசாயிகள் கழகம்

4-9-46ல் அரூர் தாலூகா மூக்கனூர் பட்டியில் தோழர் உ. வெள்ளை அவர்கள் இல்லத்தில் ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள் படத்தின் தலைமையில் திராவிட விவசாயிகள் கழகம் நிறுவப்பட்டது. வீ. இராமசாமி, உ. வெள்ளை, என். வெள்ளை ஆகிய தோழர்கள் முறையே தலைவர், செயலாளர், பொருளாளராகவும், 11பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

என்று கூறிய காலத்தில் பாடிய பல்லவியைச் சற்று சிந்திக்க வேண்டுகிறோம். சிந்தித்துத் தாங்கள் மக்களுக்களித்த உறுதிமொழியைக் காப்பாற்றவேண்டுமென்கின்றோம். காப்பாற்றும் வகையில் இன்று நாட்டிலே மக்கள்படும் எல்லையில்லாத தொல்லைகளையும் அல்லல்களையும் அடியோடு தகர்த்தெறிய வேண்டும். அல்லாக்கால் அல்லல் மிகுதியால் ஆத்திரமடைந்துள்ள அளவற்ற மக்கள் தங்கள் ஆத்திரத்தைப் போக்க முயலுங்கால் என்ன நடைபெறும் என்பதை உலக வரலாறு படித்த ஒவ்வொருவரும் உணர்ந்தேயிருப்பர். கல்வி கேள்விகளில் துறைபோய ஆட்சி மன்றத்தார் தங்கள் நிலைமையையும், மக்களின் மனக்கொதிப்பையும் சீர்தூக்கிப் பார்த்து யாவரும் இன்புற்று உரிமையுடன் வாழ வழிகோலட்டும். இல்லையேல் தங்கள் உரிமையைப்பெற மக்கள் துணிந்துவிடுவர். அங்ஙனம் மக்களே துணிவதற்கு முன்னர் ஆட்சியிலுள்ளோர் உணர்ந்து நல்லதொரு முடிவைக் காண்பார்களாயின் அவர்கள் அறிவுடையவர்கள் என்று கூறுவதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது என்பது உறுதி.

ரோஜா முத்தையா

## மாபெருங்கூட்டம்

திருப்பத்தூரில் 15-9-46 ஞாயிறு மாலை 4மணிக்குக் கருப்புச்சட்டைப் படை ஊர்வலம் புறப்பட்டு மாலை 5மணிக்கு முனிசிபல் உயர்தர பாடசாலை மைதானத்தில் நகரசபைத் தலைவர் வி. எஸ். வீரபத்திரர் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

பெரியார் ஈ. வெ. ரா., தளபதி சி. என். அண்ணாதுரை, புரட்சிக்கவி பாரதிதாசன், தோழர்கள் கே. வி. அழகிரிசாமி, டி. பி. வேதாசலம், சேலம் சித்தையா, பழயகோட்டை ச. அர்ச்சுனன், கே. கே. நீலமேகம் இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன் முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள். கருப்புச்சட்டையுடன் தோழர்கள் திரண்டு வரக் கோரப்படுகிறது. ஒலிபெருக்கி உண்டு.

## காங்கரஸ் காலிகளின் அடாச்செயல்

"பட்டிவீரன்பட்டியில் காங்கரஸ் காரியாலயத்திற்குக் காங்கரஸ் காலிகளே தீ வைத்துவிட்டு, ஷையூர் திராவிடர் கழகச் செயற்குழு உறுப்பினர்களே தீ வைத்தனர் என்று போலீசாருக்கு அறிவித்துள்ளனர்; மேலும் தந்தி என்ற செய்தித்தாளிலும் திராவிட கழகக் காலிகள் என்ற தலைப்பிட்டுத் தப்புப்பிரச்சாரம் செய்துள்ளனர்; இவ்வண்ணம் செய்வதால் திராவிட கழகத்தினர் பயந்து மனமாற்றமடைந்து காங்கரசில் சேர்வர் என்று கருதுகின்றனர்; பொதுமக்கள் காங்கரஸ் காலிகளின் தப்புப்பிரச்சாரத்தால் ஏமாற்றமடைய வேண்டாம்" என்று பட்டிவீரன்பட்டி மீனாட்சி சுந்தரம் என்ற திராவிட மணி அறிவிக்கின்றார்.

---

சென்னை 1943ம் ஆண்டு ஜூன் திங்கள் 13ம் நாள் சென்னை டி. ஆர். எஸ். பள்ளியில் பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்ட தேவதாஸ் இராசாமணி அவர்களுக்கு 11-8-46 சென்னையில் ஓர் பெண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம். குடியரசு வளர்ச்சிக்காக ஒரு ரூபாய் நன்கொடை வழங்கப்பட்டது.

## பொதுக்கூட்டம்

30-8-46 மாலை 7மணிக்கு ஈரோடு நாகம்மையார் மைதானத்தில் திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் பாலய்யா அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஈ. வி. கே. சம்பத், பி. சண்முகவேலாயுதம், புலவர் தியாகராசன், எஸ். அப்பாவு ஆகிய தோழர்களும், கோவை சுப்பிரமணியன், எம். எஸ். பழனியப்பா ஆகிய கம்யூனிஸ்ட் தோழர்களும் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் ஈ. வி. கே. சம்பத் சுமார் 2மணி நேரம் தற்கால அரசியலின் போக்கைப்பற்றியும் இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தைப் பற்றியும் விளக்கமாகப் பேசினார். கூட்டத்திற்கு சுமார் 3000 பெண்கள் உள்பட 15000 மக்கள் வந்திருந்தனர். கூட்டம் இரவு 11மணிக்கு முடிவுற்றது.

## கழகம் அமைத்தார்கள்

சென்னை மைலாப்பூர் தலையாரி வீதியிலிருந்த தமிழ் இளைஞர் கழகம் திராவிடர் இளைஞர் கழகமாக மாற்றியமைக்கப்பட்டது. எம். எஸ். நாகரத்தினம், டி. கோவிந்தன், எம். சண்முகம், எம். எஸ். மணி, எம். கிருஷ்ணன் ஆகியோர் முறையே தலைவர், உபதலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருட்காப்பாளராகவும், ஈ. வி. ராஜன், ஆர். எஸ். நாதன், டி. எஸ். மணி, ஆர். எஸ். மணி, பி. மோகனராசன் ஆகிய தோழர்கள் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* *

31-8-46ல் லால்குடியில் கூடிய திராவிடர் கழக அமைப்புக்கூட்டத்தில் தோழர் எம். முத்துக்கண்ணு தலைவராகவும், எல். ஆர். நம்மாழ்வார், மா. குமாரசாமி, லா. கா. செல்லய்யா ஆகிய தோழர்கள் செயலாளர்களாகவும், தோழர் எல். எஸ். கிருஷ்ணன் பொருளாளராகவும், 12பேர் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் எல். எஸ். ஆறுமுகம் ஆலோசகராயிருப்பார். இத்திங்கள் இறுதி வாரத்தில் கழகத்திறப்பு விழாவை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைக் கொண்டு நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பிப் பிழைத்து வந்திருக்கிறது. "இராமன் ஆண்டாலென்ன" "இராவணன் ஆண்டாலென்ன" என்று மனிதன் எண்ணி வந்திருப்பானேயாகில், அவனுடன் வாழ்ந்து வந்த கொடிய மிருகாதிகள், அவனை வாயில் போட்டுக்கொண்டே இருக்கும்.

"எவரையாளும் ராஜா எவ்வாயிருந்தாலும், தோட்டிக்குப் புல்சுமக்கும் 'வேலைதான்'" என்று 7கோடி தாழ்த்தப்பட்டோர் எண்ணி வந்ததினாலேயே, அவர்கள் தீண்டப்படாதவர்களென்றும் செல்வமடைய பொறுப்பற்றவர்களென்றும், கோவிலுக்குள் நுழையக்கூடாதவர்களென்றும், பண்ணையாட்களென்றும், பறையர்களென்றும் அடிமைகளென்றும், ஹரிஜனங்களென்றும், அழைக்கப்பட்டு வந்திருக்கின்றனர். இவ்வினத்தாருடைய மனத்திருப்தியே இவர்கள் வாழ்வைத் தாழ்வுபடுத்தி, இவர்களை முன்னேற்றமடையவொட்டாமல் செய்து வந்திருக்கின்றது. இந்தியர்களில் சில சோம்பேறிகள் "ஆங்கிலேயருக்குச் சந்திரனிடத்தில் பொன் சுரங்கமிருப்பதாகத் தெரிந்தால் அங்கேயும் போய்ப் பார்ப்பார்கள்" என்று ஏளனம் செய்வதைக் கேட்டிருக்கிறேன். அவ்வாறு கூறி உள்ளதைப் படித்திருக்கிறேன். இவ்விதமாகப் பிறரை ஏளனம்செய்யும் மனப்பான்மையால்தான், இந்தியர் கடந்த 2000 வருடங்களாக, யவனர்களுக்கும் (Greeks), சித்தியர்களுக்கும் (Sythians) மங்கோலியருக்கும் (Mongals) டார்டார்களுக்கும் (Tartors), ஒலாந்தக்காரர்களுக்கும் (Hollanders), டச்சுக்காரர்களுக்கும் (Duch), போர்ச்சுகீசியர்களுக்கும் (Portuguese), பிரஞ்சுக்காரர்களுக்கும் (French) கடைசியாக ஆங்கிலேயர்களுக்கும் (Engilsh), அடிமைகளாய் இருந்துவந்தனர், வருகின்றனர் என்லாம். காட்டுமிராண்டியாய் இருந்த மனிதர், நாளடைவில் நாகரிகத்தை அடைந்ததற்கு மூல காரணமாகவும், தூண்டுகோலாகவும், இருந்து, மனிதனை முன்னேறச் செய்தது அதிருப்தியே. Dissatisfaction is the mother of all progress. அதாவது, அதிருப்தியே எல்லா முன்னேற்றத்திற்கும் தாய் என்றார் பெரியோர். எனவே, சமதர்மத்தில் திருப்தி என்பதே இருக்காது. இருக்கும் சுகத்தைவிட மேலான சுகம் பெற வேண்டுமென்ற எண்ணம், சமதர்மசமூகத்தில் குடிகொண்டே வளர்ந்து வரும். இந்த மனப்பான்மையைத் திருப்திசெய்ய முயற்சி எழுந்தவாறு இருக்கும். இன்று பாதரட்சை, நாளைக்கு மின்சாரவிளக்கு, அதன் பிறகு உயர்தரக்கல்வி, அதன் பின் ஓய்வு நேரம், பின்னர் நந்தவனம், நல்ல வீடு, நல்ல பிள்ளைகள், நல்ல மனிதர் என்ற முறையில் படிப்படியாகவே சமதர்ம வாழ்வு உயர்ந்துகொண்டே வரும். சமதர்ம உலகில் மனிதன் மேன்மேலும் தன் வாழ்வை உயர்த்திக்கொண்டே போவான். (In the evergrowing life,) சதா உயர்ந்துகொண்டே போகும் வாழ்விற்கு வேண்டிய பொருள்களை உண்டாக்க, வேலை எல்லோருக்கும் இருந்துகொண்டே இருக்கும் இந்த சமதர்ம சமூகத்தில், இறந்து போனவர்களுக்கும், இறந்தவர்களுக்குச் சமானமானவர்களுக்கும் மாத்திரம், வேலை இல்லாமலிருக்குமே ஒழிய, மற்ற உயிர்வாழும் எந்த மனிதர்க்கும் வேலை யில்லாமலிராது. அந்த சமதர்ம உலகில், சிக்கனம் (Retrenchment) என்பதும், சம்பளத்திலும் கூலியிலும் குறைவு (Cut in Salary, or Wages) என்பதும், கனவிலும் கேட்பதரிது.

வேலையின் இன்பம் (Love of work), சமதர்ம சமூகத்தில் தான் காணமுடியும். காலெல்லாம் உழைத்துவிட்டு, உழைப்பின் பயனெல்லாம் வேலைசெய்யாதவன் அடையும் நிலைமையையும் வேலை செய்தவன் சொற்ப கூலியோடு செல்லும் காட்சியையும் சமதர்ம சமூகத்தில் காண்பதரிது. சமதர்ம சமூகத்தில், ஒருவன் தான் செய்யும் வேலையின் முழுப்பயன் தனக்கேகிடைக்குமாதலால், அன்புடனும், ஆசையுடனும், தனக்கிட்ட வேலையைச் செய்து வருவான். வேண்டாவெறுப்பாகச் செய்யும் இக்கால வேலை சமதர்மத்தில் இருக்காது. சமதர்ம சமூகத்தில், செய்துவரும் வேலையெல்லாம், சிலர் உபயோகத்திற்கல்லாமல் யாவருடைய உபயோகத்திற்கும் செய்து வரப்படுமாகையால், அதில் உழைப்பவர் ஒவ்வொருவருக்கும் வேலைசெய்து உழைக்க அவா மேலிட்டுவரும். சமதர்ம சமூகத்தில் ஒருவனுக்குப் பலர் உழைக்கவேண்டிய அவசியமில்லாதபடியால் ஒவ்வொருவனும் தனக்குத் தெரிந்த வேலையை அன்புடன் செய்துவருவான்.

சமதர்மத்தில் வேலைநிறுத்தம் என்பதே அவசியமில்லாமற் போகும். இக்காலத்தில், மக்களுக்குத் தாம் செய்யும் வேலையிலும், அதன் முழுப்பயனை அனுபவிப்பதிலும் அவர்களுக்கு யாதொரு அக்கும் பாத்தியதையும் இல்லாததால்தான் வேலை நிறுத்தங்கள் உண்டாகின்றன. ஆனால் வேலை செய்வோரே, தொழில் புரிவோரே, தாங்கள் செய்து

வரும் வேலை நிர்வாகத்தைத் தாங்களே பரிபாலனம் செய்யும் பாத்தியதைச் சமதர்மத்தில் பெறுவாராகையாலும், தாங்கள் செய்துவரும் வேலையில் எழும் குறைகளைத் தாங்களே சரிசெய்து கொள்வார்களாகையாலும், வேலை நிறுத்தமோ, அல்லது கதவடைப்போ சமதர்மத்தில் இல்லாதிருக்கும்.

சமதர்ம சமூகத்தில் வேலை நிறுத்தம் குறைந்தே வரும். 8, 9, 10 மணிநேரம் செய்யும் இக்கால வேலை சமதர்ம சமூகத்தில் இருக்கவே இருக்காது. வாழ்விற்கு வேண்டிய பொருள்கள் யாவும், உலகிலுள்ள மக்கள் 4மணி நேரம் உழைப்பாலேயே கிடைக்கக் கூடுமென, பொருளாதார விற்பனர்கள் ஒரு கணக்கெடுத்திருக்கின்றார்கள். அதாவது, நாட்டிலுள்ள மக்களனைவரும் கல்விபெற வேண்டுமானாலும், யாத்திரை செய்ய வேண்டுமானாலும், சங்கீதம் பாடல் கேட்கவேண்டுமானாலும், நாடகக்காட்சி அனுபவிக்க வேண்டுமானாலும், நல்ல உணவு, நல்ல ஆடை, நல்ல வீடு பெறவேண்டுமானாலும், நல்ல புத்திரர்களை வளர்க்கவேண்டுமானாலும், உலகில் கிடைக்கக்கூடிய எல்லா அவசிய சுகபோகங்களை அனுபவிக்க வேண்டுமானாலும், மனிதனுடைய 4மணிநேர உழைப்பே போதுமென மதிப்பெடுத்திருக்கின்றார்கள். இந்த செல்வாக்கு சமதர்ம சமூகத்தில் தான் கிடைக்கும்.

மற்ற நேரங்களை எவ்விதம் கழிப்பதென்று கேள்வி பிறக்கலாம். அதற்கு விடையாதெனில், மன உல்லாசம், விஞ்ஞான ஆராய்ச்சியில் உல்லாசம் முதலிய சுகப்பேற்றை ஓய்வு நேரங்களில் யாவரும் அனுபவிக்கக்கூடும். இக்காலத்தில், இலட்சத்தில் ஒருவர்கூட இத்த உல்லாசப்பேற்றை அனுபவிக்க முடியவில்லையே! உலக யாத்திரை யாரால் செய்யமுடிகின்றது! விஞ்ஞான ஆராய்ச்சியாரால் செய்ய முடிகின்றது! ஆரசியல் இன்பத்தை யாரால் பெற முடிகின்றது! உலக சுகபோகங்கள் யாருக்குக்கிட்டுகின்றன! இலட்சத்தில் ஒருவருக்குக் கூட கிட்டவில்லையே! ஆனால் சமதர்மத் திட்டத்தில் ஓய்வு நேரம் அதிகரிக்குமாகையால், சகலரும் உயர்தரவித்தைகளைக் கற்று, வாழ்வை உயர்த்திக் கொள்ள அனுகூலமாகுமன்றோ! காலாகாலங்களாக வேலையின் ஆனந்தத்தை அனுபவிப்போர் சிலரே. ஆனால் சமதர் சமூகத்தில் உலகிலுள்ள யாவரும் அவரவர்கள் செய்யும் வேலைகளை ஆனந்தத்துடனே செய்யப்புகுவர். இது ஒன்றே உலகம் சுகம் உய்ய போதுமானதாகும்.

## சமதர்மத்தில் குடும்ப நிலைமை

பொருளாதார வித்தியாசமற்ற சமூகத்தில், ஆணுக்கும் பெண்ணுக்கும், சரி சமத்துவம் உண்மையாக ஏற்படும். பாரத ராமாயண காலமுதல் பொருளாதார வித்தியாசம், ஆணுக்கும், பெண்ணுக்கும் இருந்து வந்தபடியால், ஆண்மக்கள் பெண்மக்களை அடிமைகளாக்கிக்கொண்டு வந்தனர். இப்போது ரஷ்யாவைத் தவிர உலக முழுமையும் இந்தப் பொருளாதார வித்தியாசம் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்பட்டுள்ளது. இந்த வித்தியாசத்தின் பயனாக, பெண்களுக்குச் சொத்துரிமையில்லை, வேலை உரிமையில்லை, சம்பாத்திய உரிமை இல்லை, மண உரிமை இல்லை, ஒற்றுமை இல்லாக் கல்யாணத்தை ரத்து செய்யும் உரிமை இல்லை, அரசியலில் சுதந்திர உரிமை இல்லை. இத்யாதி பலவீனத்தால் உலகிலுள்ள மக்களில் பாதிக்குமேற்பட்ட பெண்மக்கள், அடிமைகளாய் வாழ்ந்து வருகின்றனர். காலை முதல் இரவுவரை அடுப்பங்கரையில் உழைத்துவரும் துர்பாக்கியம் பெற்ற பெண்கள் நிறைந்த குடும்பங்களில் என்ன அன்பு, என்ன இன்பம் கிடைக்கும்? ஏழைக்குடும்பங்கள் இருக்கும்வரை, இவ்விரு குடும்பங்களில் பெண்களுக்குச் சரி சமத்துவம் இல்லாமல் இருக்கும்வரை, உலகத்திலுள்ள எந்த குடும்பமும் சுகமுற்று வாழமுடியாது. இந்த பொருளாதார வித்தியாசத்தில் தான் உலகிலுள்ள மக்களுக்குக் கவலை ஒழியாமலிருக்கின்றது. பணமில்லாத கவலை (திருடர், கொள்ளைக்காரர், கொலைக்காரர் முதலியவர்களால் நேரிடும் பயக்கவலை) பொருளாளிக்கும் இருந்தே வரும். ஒருவன் தயவால் கொடுக்கவும் மற்றொருவன் இல்லாமையால் வாங்கவுமாகிய நிலைமை அதாவது தருமமிடவும், தர்மத்தைப் பெறவும் நேரிடும் துர்பாக்கியம் இந்தப் பொருளாதார வித்தியாசத்தால்தான் பண்டைக்கால முதல், உலகத்தை நாசப்படுத்தி வந்துள்ளது. (தொடரும்)


## விற்பனைக்கு

"பார்ப்பனப் படுமோச விளக்கம்" என்னும் இந்நூல் டிம்மி 1/8 சைசில் 16பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. சுருக்கமாகப் பாக்களில் மிகத் தெளிவாகவும், அழகாகவும் சொல்லப் பெற்ற இக் கருத்துக்கள் நம் இயக்க மாணவ மணிகளுக்கும், திராவிடத் தோழர்களுக்கும் மிகவும் பயன்படும். விலை 0-3-0. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 அணா தபால் தலை அனுப்புக.

குடி அரசு பதிப்பகம். ஈரோடு.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.